Subscription Rs 1 50
Postage to Ceylon & India 50
do Straits 75

# THE Hindu Organ

Advertising charges per line
do per half col Rs 3 00
do per Column 5 00

VOL X. ௧0-ம் புத்தகம் | JAFFNA, WEDNESDAY DECEMBER 28, 1898 | இந்துசாதனம். | கலியுகஸ்௵ ௫000. ௧௮௯௮ டிசெம்பர்௴ ௨௮௳ | NO. 10 இல ௧0

PUBLISHED EVERY OTHER WEDNESDAY. பக்ஷத்துக்கொருமுறை புதன்கிழமைகளிற் பிரசுரிக்கப்படும்.

## NOTICE.

On Wednesday the 1st day of February 1899 commencing at 2. P M we shall sell by public auction to be held at Mr. Nagalingam's house opposite to his late residence in the Main Street in the Town of Jaffna, the following property belonging to the estate of Mr. Nagalingam.

1. A cocoanut Estate situated at Kaithadi called Kularupiddi in extent 200 Lachams containing cocoanut trees partly bearing.

2 An allotment of land situated at Kaitadi called Navatkulikkarai in extent 3A. - 2R. - 1P. suitable for paddy cultivation.

3. A house and compound situated at Kankesanturai.

4. A house and premises situated at Main Street of the Town of Jaffna opposite to the residence of the late Mr. Nagalingam.

5. A piece of paddy field situated at Vannarpannai West called Mootaiyinanvalavu and other parcels in extent 71 Lachams of Paddy culture.

6. A cocoanut estate situated at Palavi in Kachchay called Vellarikkachchi in extent 26 acres more than half of which is planted with cocoanuts and the remaining portion is fit for tobacco cultivation.

V. CASIPPILLAI
S. VELUPPILLAI
14th December 1898 Executors

---

## IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI

Testamentary Jurisdiction } No 935

In the Matter of the Estate of the late Cecilia Charlotte Ponnamma wife of Chinnattampy Muttukkumaru of Jaffna
Deceased.

William Rajaretnam Nevins of Jaffna
Petitioner.

Vs

Cathirittampi Muttukkumaru Post and Telegraph Master Kurunegalla
Respondent.

This matter of the Petition of William Rajaretnam Nevins of Jaffna praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Cecilia Charlotte Ponnamma wife of Cathirittampi Muttukkumaru coming on for disposal before C. Eardley Wilmot Esquire, District Judge, on the 16th day of November 1898 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 16th day of November 1898 having been read, it is declared that the Petitioner is the brother of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to him unless the Respondent or any other person shall on or, before the 16th day of January 1899 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 16th day of November 1898

Signed/ C. EARDLEY WILMOT
District Judge.

---

## THE HINDU ORGAN.

JAFFNA, WEDNESDAY, DECEMBER 28, 1898

### *THE "MORNING STAR" AGAIN.*

In a recent number of the "Morning Star", the Editor expatiated on the evils of caste. Thereupon we pointed out that the rigorous distinctions maintained between man and man by the social system of the West, and the antipathy shown against the Coloured races by the Western nations, which has made its influence felt even in their laws and legislation, are more pernicious in their effects than the "great evil" of caste. The Editor of the "Star" does not call in question our facts or conclusions, but affirms that "so long as the world lasts there will be social distinctions and racial antipathies," and labours to preach a homily on the distinction between ignorance and culture, superstition and refinement, vice and virtue. He is a theologian and moralist, and knows or must know that these distinctions are not founded on the accidents of birth, possession of wealth, or fashionable living, but on the intrinsic merits of individuals. The principle underlying them is quite different from that on which the social distinctions obtaining in Europe and America are chiefly founded.

The admission of the Editor that social distinctions and racial antipathies are bound to last as long as the world lasts—till the Millenium perhaps—cuts the ground from under his own feet. If he and his confreres should succeed in doing away with the caste system, its substitute will be a society constituted on Western models with all its attendant evils. For, according to the learned Editor, social distinctions are inherent in human nature, or in other words, inseparable from the constitution of human society. It is the institution of caste that has saved our country from anarchists, nihilists, socialists, and a Poor-law system—from men of fashion clubbing together discarding their poor relations—from the creation of artificial wants—from meaningless conventionalities, and the thousand and one other evils which beset "society" in the West We can understand a man trying to abolish the caste system who tries to abolish the pernicious social distinctions in vogue among his own countrymen. But the conduct of one who vigorously maintains the latter and denounces the former is, to say the least of it, inconsistent. Even as regards the former the reform attempted is only a 'paper-reform". It is a notorious fact that into the colleges established by our contemporary and his confreres low caste boys are systematically refused admission.

What has the Editor's earnest Christian member of the Bar done to put down caste? We have not come across any gentleman answering to our contemporary's description. If any such exist, he has not made his influence felt by his countrymen, and possibly his words are as empty, and his pretensions as hollow, as those of the Western man who preaches the doctrine of the "liberty, equality and fraternity "of all nations, but never puts it into practice.

It is true that Manu lays down rules for the observance of caste. Does not Moses lay down such rules? Why was the priestly office confined to the descendants of Levi? Even at this day do not the Christian Governments of America, Australia, Africa, and India regard the white man as a being superior even to the Brahman? Our contemporary asseverates that as long as the world lasts the distinctions between the ruled and the rulers will last. According to him, the distinction between the American and the Philippine Islander, the Englishman and the native of India, the Frenchman and the Annamese, will last for ever. Then what if the distinction between the Brahman and the Sudra, the Sudra and the Pariah, last for ever? Again, what is the rationale of the distinction between the American and the Japanese, the Australian and the Chinese? Are not Japan and China as much Sovereign Powers as the United States? What except colour is in issue here?

The "Morning Star" of the 15th December states that the author of the article on "public opinion" did little more than condemn the verdict of the jury in the Abduction case, and that it was by reading between the lines we found reason to complain against it. Knowing the character of the "Morning Star" for shifting ground, we anticipated an argument of this kind, and hence it was we quoted whole passages from the article. Our country was said to have "a marriage system which differs little from traffic in the persons of women", our community was characterized as 'abridging the liberties of the female sex", and as one "where the general moral tone is low", &c &c In fact, the verdict was attributed to a vicious marriage system and a low tone of morality prevailing in Ceylon. If our contemporary had published the article inadvertently and without duly weighing its contents, he could have gracefully withdrawn the objectionable passages when his attention was drawn to them. But to say that we had misread the article is to add insult to injury We, however, hope that our country and its public institutions will survive the outpourings of the "Morning Star" Why talk glibly of "a community which abridges the liberties of the female sex"? The abridgment took place in the Garden of Eden when God Almighty, without contemplating the Western drawing-room or the New Woman, subjected woman to the rule of man in the imperative words:—"He shall rule over thee." Of all the journals published in the Island, it was the "Hindu Organ" that first condemned the verdict in the Abduction Case, The "Morning Star" could have done so, if its object was to mete out justice to the parties. But it cared little about their interests and only wanted to make use of the verdict as a means to an end—to carry out its proselytising operations by denouncing the public institutions of this country, in utter ignorance of the fact that it was the people who were already proselyted that stood by those who committed "brigandage in capturing the persons of females."

We now come to the baseless and astounding statement of the "Morning Star" that we made "attacks on Christianity" in our issue of the 30th November. Evidently our contemporary did not read the "Hindu Organ" carefully. Otherwise it is utterly inexplicable how such a charge could have been preferred against us Our mission in life is not to "pick holes" in the religions of others, which is a task for which he is eminently fitted. Unless it is supposed that the "Morning Star" is identical with Christianity, its effusions are so many *Sermons on the Mount*, the Editor and his confreres and followers are so many Christs, their faults and failings are those of the religion founded by the great Jewish Teacher, our criticisms cannot be said to have had the effect of attacking Christianity But the Editor's conduct does not seem strange in our eyes He has been always accustomed to think that Christianity a[illegible] Christians are one and the same thing [illegible] is the reason why he seldom co[illegible] as a censor of Christian morals O[illegible]

(continued on the 4th p[illegible]

உ
கணபதி துணை

வாழ்கவந்தணர்வானவரானினம்...... ...... ...
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக...... ......
ஆழ்கதீயதெல்லாமரனுமமே...... ...... ... ...
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே...... ...... ......

# விளம்பரம்.

## இந்துசாதனம்.

இவ்விந்துசாதனப் பத்திரிகையைப் பருப்பித்துத் தமிழ்பாகத்தை வேறாகப்பிரித்து பக்ஷத்திற்கொருமுறையும் இங்கிலிஷ்பாகத்தை வாரமொருமுறையும் பிரசுரித்துவரத் தீர்மானித்திருப்பதால் அதற்கு தாதாக்களாகவும் கையொப்பக்காரராகவும்வர விரும்புவோர் பணத்தைச் சைவ பரிபாலன சபைத் தனுகிகாரி (TREASURER SAIVA PARIPALANA SABAI) க்கு அனுப்பவேண்டியது.

மேலும் இப்பத்திரிகைக்குப் பாக்கிக்காரராயுள்ள கையொப்பநேயர்கள் தாம் தாமிறுக்கவேண்டிய பாக்கிக்கையொப்பப்பணத்தை இத்தருணத்திலிறுத்துவிடுவது பேருபகாரமாயிருக்கும்.

இங்ஙனம்:
இந்துசாதன மானேசர்.

## மகாபாரதம்

### சபாபருவம்.

இது விளம்பி ஹு கார்த்திகைமீ முதல் சங்கியையாக விற்றுவருகின்றோம். சங்கிலை க தபாற்செலவுடன் உஅ சதம்.

ஆதிபருவம் உரையாசிரியர் படத்தோடு ரூபா ௩இ.

வை. சுப்பிரமணியபிள்ளை
விவேகாநந்த யந்திரசாலை மானேசர்.

### குவினைமின்! குவினைமின்!!

திறமான குவினையின் வண்ணார்பண்ணை துரை அன் கோ வைத்தியசாலையில் அவுன்சு ஒன்று ரூபா. க. சதம். எடு ஆக கைரொக்கத்திற்கு விற்கப்படும்.

துரை அன் கோ
யாழ்ப்பாணம்.

## இந்து சாதனம்.

### எம்மூர்த் தற்கால ஆரோக்கியநிலை.

எம்மூர்த் தற்கால ஆரோக்கிய நிலையை என்னென்று சொல்வேம். எங்கே போனாலும் பிணப்பறையும் அழுகுரலுமே கேட்கின்றது. சுடலைகள் சவக்காலைகள் ஒவ்வொன்றிலும் நாளுக்குநாள் தகனிக்க அல்லது சேமிக்கப்படும் பிரேதங்கள் கொஞ்சமல்ல. சுரமே எங்கும் பரவிப் பெருமோசம் விளைக்கின்றது. வீட்டுக்குவீடு ஒருவர் இருவர் அல்லது பலர் சுரத்தால் வருந்தாத இடமில்லையென்று சொல்லத்தக்கதாயிருக்கின்றது. பெருமழைபெய்ததாலோ அன்றி வேறு காரணத்தாலோ நம்மூர்த்தேச சௌக்கியம் முழுதும் மாறிக்கொண்டது. இப்படிப்பட்ட அசௌக்கியநிலையில் எம்மூர் முன்னொருபோதுமிருந்திருக்கவில்லை. பட்டினப்பகுதியை ஒழிந்த மற்றையவிடங்களில் தக்கவைத்தியர் இல்லாமற் சனங்கள் பெருமவஸ்தைப்படுகின்றனர். சுரத்திற்கு இங்கிலிஷ் வைத்தியமே தகுந்ததெனவுணர்வர் இப்பொழுது நன்றாயறிந்திருக்கின்றனர். ஆயின் பலவிடங்களிற் தக்க இங்கிலிஷ் வைத்தியர் கிடைப்பதரிது. ஆகவே ஆங்காங்கு திறமையும் பயிற்சியுமுடைய இங்கிலிஷ் வைத்தியர்களையனுப்பி உதவிபுரிவது அரசினர் கடமையாகும். அன்றன்று சம்பாதித்துச் சீவனம்பண்ணுஞ் சனங்கள் எம்மூரில் அனேகருளர். இவர்கள் நோயாற் பீடிக்கப்பட்டு வருந்துவரேல் இவர்களுக்கு மருந்துச்செலவிற்கும் அன்னாகாரத்திற்கும் வழியாது. இப்படிப்பட்டோர் இலகுவிற்சென்று இனமாய் வைத்தியசகாயம் பெறுமாறு சமீபத்தில் ஓர் வைத்தியசாலையிருக்கவேண்டியது. மறவன்புலவிலும் அதற்கணித்தான விடங்களிலும் சுரமதிகப்படுங்காலத்து அரசினர் ஓர் வைத்தி[illegible] மருந்துடனனுப்பி வைத்தியசகாயம்புரிவ[illegible]க்கம். இம்முறை அவ்விடங்களிலமாத்தி[illegible]ாழ்ப்பாணம் முழுவதும் சுரமதிகப்பட்[illegible]வேண்டியவிடங்களுக்கெல்லாம் வைத்தியர்களை மருந்துடனனுப்பவேண்டியது அத்தியாவசியகம். இதநிற்க எம்மூரிற் கற்றுக்குட்டிவைத்தியராயுள்ளோர் பலருளர். இவர்களுக்கு வியாதியின்கூறோ தெரியாது, மருந்தோ கைவசமில்லை. வயிறுவளர்த்தற்கு வேறுவழியின்றி இத்தொழிலிற் கையிட்டிருக்குமிவர்களால் ஊர்க்குப் பெருங் கெடுதியே விளைகின்றது. இனி வைத்தியத்தை நன்குகற்ற ஆயுள்வேத பண்டிதர்களுள்ளும் பலர்க்குச் சீவகாருண்ணியமென்பது சற்றேனுமில்லை. பணத்திலேயே இவர்கள்பெருங்காதலும் கருத்துமுள்ளவர்களாகவிருக்கின்றனர். தமமுயிர் தமக்கு எவ்வளவருமையோ அப்படியே மற்றவர்களுக்குமிருக்குமென்பதை இவர்களுணருகிறதில்லை. உயிர்களைக் கொலைசெய்வதை நாடோறுங் காண்பானொருவனுக்கு கொலையெனப் பேதாச்சாதாரணசம்பவமாகி அதிலவனுக்குப் பதைபதைப்பும் பரிதாபசிந்தையுமில்லாது போவதுபோல இவர்களும் பலவுயிர்கள் வருந்துவதையும் இறப்பதையும் நாடோறுங் காண்பவராதலாற்போலும் காருண்ணியசிந்தை இவர்களுக்குப் படிப்படி குறைந்துபோகின்றது. உயிர்க்கு இதஞ்செய்தலை பெரும் மேலான தர்மமென நினைந்து பொருளுபகரிக்கக்கூடியவர்களிடமன்றி மற்றையோரிடம் பொருள் வருத்தி வாங்காது தம்மாலியன்ற உதவிசெய்வதன்றோ நல்வைத்தியரிலட்சணமாகும்.

### கொள்ளைநோயும் எமதரசினரும்.

எமது அயல்நாடும் தாய்நாடாயுமுள்ள இந்தியாவின் வடபாகத்தி லுற்பத்தியாகி அனேக உயிர்களைக் கொள்ளைகொண்டு பெருங்கெடுதிவிளைத்த கொள்ளைநோயானது இவ்விலங்காபுரியிலும் புகுந்துகொள்ளாது தடுத்தற்காக எமதரசினர் செய்துவரும் முயற்சிகள் மிகவும் வியக்கற்பாலன. இந்தியாவிலிருந்து இங்குவரும் சனங்கள் இறங்குமிடங்களாயுள்ள துறைமுகங்களெல்லாம் இப்பொழுது முழுதுமடைக்கப்பட்டிருக்கின்றனவென்று சொல்லலாம். தோட்டக் கூலிச்சனங்கள் போக்குவரவுபண்ணும் பாதைகளிலொன்றாகிய மன்னார்ப்பாதை முழுவதுமடைபட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள துறைமுகங்களில் ஊர்காவற்றுறையையொழிந்த ஏனைய துறைமுகங்களெல்லாம் விரைவில் முழுதுமடைக்கப்படும். ஊர்காவற்றுறையிலும் நெல் லரிசி முதலிய வியாபாரப்பொருள்கள் இறக்குமதியாவதன்றிப் பிரயாணிகள் எவராவது இறக்கப்பட மாட்டார்கள். கொள்ளைநோயாற் பீடிக்கப்பட்டோர் யாராவது இங்கு காவல்கடந்து வரநேரிடின் அவர்களைவைத்துப் பராமரித்தற்காக, ஓர் கொள்ளைநோய் ஆஸ்பத்திரி இங்கு கட்டப்படும்.

எமது இராசதானியிற் கொள்ளைநோய் ஆஸ்பத்திரிகள் கட்டப்பட்டிருக்கின்றன. அன்றியும் இக்கொடியநோ[illegible]ப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் [illegible]க்காவல்களையெல்லாம் கடந்து அங்குவந்து புகுந்துவிடுங்கால், நோயாளரைத் தக்கவாறு பராமரித்தற்காக போதியவைத்தியர்களும் வைத்திய ஸ்திரிகளும் தயாராயிருக்கின்றனர்.

இத்தகைய கட்டுப்பாடுகளும் ஒழுங்குகளும் எமதரசினராற் செய்யப்பட்டிருப்பினும் தென்இந்தியாவிலிந்நோய் அதிகமாகப் பரவ நேரிடுமாயின் தூத்துக்குடிப்பாதையால் இலங்கைக்குவரும் கூலிச்சனங்கள்மூலமாய் இக்கொடியநோய் இங்குவந்து புகுந்துவிடுமென்பது திண்ணம். ஆகவே எமதரசினர் தூத்துக்குடிப்பாதையையும் சிறிதுகாலத்திற்கு முழுதுமடைத்துவிடுதல் புத்தியாகும். இப்பொழுது அப்படிச்செய்யாவிடினும் தென்இந்தியாவில் அதிகமாய் இந்நோய் பரவும்பொழுதாயினும் அப்படிச் செய்துவிடுதல் உத்தமமாகும்.

## சமாசாரம்

பதிவுகந்தோர்த் தலைவர்—பதிவுகந்தோர்த் தலைவர் ஸ்ரீ அருணாசலமவர்கள் திரிகோணமலையிலிருந்து லேடிகவலக் கப்பல்மார்க்கமாக இங்குவந்து தமதிழுள்ள ஆபீசுகளைப்பார்வையிட்டு சென்றவாரம் கொழும்புக்குத் திரும்பினர்.

ஸ்ரீ. அப். திருநாவுக்கரசு அவர்கள்—ஸ்ரீ அப் திருநாவுக்கரசு அவர்கள் சமுசாரசகிதராய்க் கொழும்பு சென்றிருக்கின்றனர்.

சோதனாகர்த்தர்—சோதனாகர்த்தர் மெஸ் லெம்பிறக்கனவர்கள் இப்பொழுது கொழும்பு சென்றிருக்கின்றனர். வருகிற வருடத்தொடக்கத்தில் இங்குவருவர்.

யாழ்ப்பாணம் ஆபத்துக்குதவி வைத்தியசாலை—இவ்வைத்தியசாலையில் ஓர் வைத்தியராகவிருந்து காலஞ்சென்றுபோன மெஸ். கந்தவனமவர்களின் இடத்திற்கு மெஸ் டத்தன் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

சிழ்தரச் சிவில்சேவிஸ் பரீக்ஷை—இப்பரீக்ஷை வருகிற வருஷம் ஆனி மீ நடைபெறும். இப்பரீக்ஷைக்குப் பிரவேசிப்போருள் முதல்வராகச் சித்திபெறுபவர் ஒருவரே தெரிவுசெய்யப்பட்டு உத்தியோகமளிக்கப்படுவர். சித்திபெறுபவர்க்கு முதன்முதல் ரூபா ௲000 வேதனமாகக் கொடுக்கப்படும்.

ஸ்ரீ. ஆ கதிரவேற்பிள்ளையவர்கள்—கொக்குவில்வாசரும், பகிரங்கவேலைப்பகுதியில் இற்றைக்கு ஏறக்குறைய இருபதுவருடங்களாக உத்தியோகத்திலமர்ந்திருந்து மிக்க யோக்கியதையோடும் திறமையோடும் தமது கடமைகளைப் பார்த்துவந்தவருமாகிய இவர் இப்பொழுது தமது உத்தியோகத்தினின்று மிளைப்பாறியிருக்கின்றனர்.

ஆறுசத முத்திரை—இனிமேல் அவுஸ்திரேலியாவையொழிந்த ஏனைய ஆங்கில இராச்சியங்களுக்கெல்லாம் அரையவுன்சுக்குட்பட்ட நிறையுள்ள காயிதங்களுக்கு ௬ சதமுத்திரையொட்டியனுப்பலாம். மேற்படும் ஒவ்வொரு அவுஞ்சுக்கும் சதம ௬ ஒட்டவேண்டும்.

ஓர் பெருங் கொலை—மயிலிட்டியிலே விறகொடிக்கச்சென்ற ஓர் சிறுமியை மூன்று தஷ்டர் பிடித்து அவளோடு பலவந்தப்புணர்ச்சி செய்ததுமன்றி, அவளணிந்திருந்த கலைகளைக் கழற்றியபின் அவளைச் சின்னாபின்னமாக வெட்டிக் கொலைபுரிந்துவிட்டனர். இத்துரோகிகள் இக்குரூரக் கொலையைப் புரிந்தபின்னர் பிரேதத்தைநோர் குளத்திலமிழ்த்தி அதன்மேல் சில கற்களையேற்றிவைத்தனர். பிரேதம் பொருமியபோது சற்கள் விலகியதால் அது தண்ணீரில் மிதந்ததாம். பொலிஸ்சுப்பறின்றன் மெஸ். திறங்கல்துரையவர்களும், பொலிஸ்நீதவான் மெஸ். பாட்லற்துரையவர்களும் சென்ற உ௯ ம் தேதி மயிலிட்டிக்குச்சென்று விசாரணைநடத்தி மூன்றுபேரைப்பிடித்து விளக்கமறியலில் வைத்திருக்கின்றனர். இரத்தக்கறையிருந்த கத்தியொன்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பனைமரமொன்றிற் கத்தி தடைத்த அடையாளமுமிருக்கின்றதாம். விறகுகளு மங்குமிங்குமாய்ச் சிதறுண்டுகிடந்தனவாம். ஐயையோ இத்தகைய குரூரக் கொலையைப்புரியக்கூடிய வன்கணாளர் எம்மூரில் இருந்தார்களென்பதை நினைக்க மனம் ஏங்குகின்றது.

தீவிபத்து—கொழும்பிலுள்ள செக்கடித்தெருவில் தம்புபோடப்பட்டிருந்த ஓர் வீட்டிற் தீப்பற்றி தம்பு முழுவதும்எரிந்து மோசம்போனதுமன்றி வீடும் ஒருமரமாவதுசப்பாது முழுதமெரிந்து மோசம்போய்விட்டது. இவ்வீட்டிற்கு அணித்தாய் அனேக ஓலைவீடுகளிருந்தும் பொலீசாருடைய உதவியால் இவைகளிலும் தீப்பற்றிப் பெருவிபத்துண்டாகாது தடுக்கப்பட்டது. இவ்வீட்டில் எரிந்துகொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கிலிருந்து தம்பிற்றீப்பற்றியதே இவ்விபத்திற்குக்காரணம். தம்பில் நெருப்புப்பற்றியெரிந்தபோது வீட்டுக்குள் ஐந்துபேர் நின்றனராம். அவர்கள் நெருப்பையவித்துவிடக்கூடியவரையிற் பிரயத்தனஞ்செய்தும் வாய்க்கவில்லையாம். இத்தீவிபத்தாலுண்டாய நட்டம் ஏறக்குறைய மூவாயிரம் ரூபா வரையிலுண்டாம்.

இற்றைக்கு இரண்டுமூன்று வருஷங்களின்முன் யாழ்ப்பாணம் உதவிஏசன்றராயிருந்து இப்பொழுது கொழும்பு பொலிஸ் சுப்பெறிண்டாகவிருக்கும் மெஸ் போஸ் அவர்கள் இத்தீயை அவித்தற்கு எடுத்தமுயற்சியும் காட்டியதிறமையும் மிகவும்வியக்கற்பாலது. இவர் இங்கிருந்தபோது சோரியில் ஓர் வீட்டில் நெருப்புப் பற்றியெரிந்தபோது பொலீசர்வரமுன் தான்முந்திச் சென்று எவரும்பயந்து நிற்கும் அஞ்சாது கூரைமீதேறி நெருப்பை அவித்துவிடுவதற்குப் பேருதவிசெய்தனர்.

ஓர் ஐரோப்பியஸ்திரியும் வேலைகாரனும்—கொழும்பிலுள்ள வெள்ளவத்தையென்னுமிடத்தில் வாசஞ்செய்யும் எலிசபேத் ஹமில்றன் என்னும் ஐரோப்பியஸ்திரியிடம் வேலைகாரனாகவிருந்த ஓர் சிங்களவன் ஏதோ கோபம் காரணமாகத் தனது எசமாட்டியை கத்தியாற்குத்திவிடும்படி துரத்திச்சென்றதுமன்றி வீட்டிலிருந்த சாமான்களையும் அடித்துடைத்துவிட்டனனும். இவனுக்குவிரோதமாகக் கொழும்புப் பொலிசுக்கோட்டில் வழக்குக்கொண்டுவரப்பட்டு விளங்கப்பட்டபோது எசமாட்டி தனக்குச் ஜோட்டால் அடித்தமையால் தான்கோபங்கொண்டு சாமான்களையுடைத்ததேயன்றி கத்தியாற்குத்த எத்தனிக்கவில்லையென மறுத்தனன். துரைச்சாணியோ தனது பரக்கொன்றை இவன் களவெடுத்திருக்கவேண்டுமென்று ஐயுற்று அவனைத் தான் கடிந்தபேசியதாலும், கன்னடத்தைக் கடிதமொன்று எழுதிக்கொடுக்கச் சம்மதியாததினாலுமே கத்தியாற்குத்திவிட எத்தனித்ததுமன்றி சாமான்களையுமுடைத்துவிட்டனனென்றுசொல்லினள். பொலிஸ்நீதவான் இவ் வழக்கை டிஸ்திறிக்கோட்டுக்குப் பாரப்படுத்தியிருக்கின்றனர்.

கொள்ளைநோய்க் கூடாரங்கள்—வேண்டியவிடங்களுக்கு இலகுவிற்றூக்கிக்கொண்டு செல்லக்கூடியதாய் கொள்ளைநோய்க்கூடாரங்கள் அரசாட்சியார் தொழிற்சாலையிற் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளிலிரண்டு கண்டிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மற்றையவிடங்களுக்கு மிவைகளனுப்பப்படுமாம்.

திரிபதார்த்த சிந்தனை—இது பதி,பசு, பாசமென்னும் முப்பொருள்களின் இலக்கணங்களை ஒருவாறு தொகுத்துச் சிந்திக்கறியும்பொருட்டுச் சைவசித்தாந்தநூல்கள் பதினான்கினையும் மேற்கோளாகக்கொண்டு ஆன்றோர்களால் வசனநடையிலியற்றப்பட்ட ஓர் சிறந்தநூல். இதனைத் திருநெல்வேலி ஸ்ரீ. S. பால்வண்ணம்பிள்ளையவர்கள் பார்வையிட்டுத் தூத்துக்குடிச் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற் பதிப்பித்திருக்கின்றனர். இன்னுமிதுபோன்ற பல சைவசித்தாந்த நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தவேண்டுமென ஸ்ரீ பால்வண்ணம்பிள்ளையவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். சைவசித்தாந்த நூலாராய்ச்சிசெய்யப் புகுவோர்க்கு இந்நூல் பெரிதுமுபயோகப்படும். இந்நூலையெமக்கனுப்பிய தூத்துக்குடி திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் மடாலய சைவசித்தாந்த சபையார்க்கு நாம்ஸ்துதி கூறுகின்றோம். இச்சபையார் சைவசித்தாந்த சமயவிருத்தியின்பொருட்டுச் செய்துவரும்முயற்சி மிகவும் வியக்கத்தக்கது. இச்சபையானது மேன்மேலும் விருத்தியெய்தி சைவசித்தாந்த ஞானச்சுடரொளி வென்றும்பிரகாசிக்க எம்பெருமான் திருவருள் புரிவாராக.

கனம் திலக்—இராசதுரோகமான விஷயங்களைத் தமது பத்திரிகையிலெழுதினரென்னுங் குற்றச்சாட்டின்பேரில் ௧அ மாசக் காவல்விதிக்கப்பட்டு ஏறக்குறைய ஒருவருடமவரையிற் காவலிலிருந்து பின்விடுதலைபெற்ற கனம்பாலகங்காதர திலக் என்பவர் சென்னையிற் கூடவிருக்கும் காங்கிறஸ் மகாசபைக்கு வரவிருப்பதால் அவரைக்கண்டு சந்திப்பதற்கு அநேக சனங்கள் எதிர்பார்த்திருக்கின்றனராம்.

பிளேக்—பெங்களூரில் பட்டணத்தில் பிளேக்நோய் ஆரம்பமான காலமுதல் சென்ற அம தேதி வரையில் ௩0௯0 பேருக்குண்டாகி உ௬௫ பேர் இறந்தார்கள். உள்ளூர்களில் உ௯௨உ பேருக்குண்டாகி உ௭௫ பேர் இறந்தார்களாம்.

கொலை—தொண்டாய் இராச்சியப்பகுதியைச்சார்ந்த "டோ" என்னுமிடத்தில் கோவிந்தசாமி என்னுமொருவனுடைய மனைவி அமிர்தமென்பவள் தனது புருஷனோடு பிணக்குற்று அவனை விட்டுப்பிரிந்து பக்கிரி என்னும் சோரநாயகனோடு சேர்ந்திருந்தாள். இப்படியிருக்குங்காலத்திற் பக்கிரி என்பவன் அமிர்தமென்பவளிடம் தத்துவம்பெற்று கோவிந்தசாமி என்பவன் விவாககாலத்திற் தனது பெண்சாதிக்கு எழுதிக்கொடுத்திருந்த அவனது ஆஸ்தியின் மூன்றிலொருபங்குக்கு வழக்குத் தொடுத்து ஆஸ்தியை கைக்கட்டினான். இப்படியிருக்குஞ் சமயத்தில் சிலர் கோவிந்தசாமி என்பவனையும அவனது பெண்சாதியையும் பக்கிரியென்பவன் அறியாதபடி சமாதானப்படுத்திவிட அவன் அவளை முன்செய்துகொள்ளப்பட்ட ஒழுங்கின்படி கூட்டிச்செல்ல ஓரிடத்திற் காத்திருந்தான். சொல்லியிருந்த பிரகாரம் அமிர்தமென்பவள் வந்தபோது சோரநாயகனும் இதனையறிந்துபோலும் அங்கு வந்து நின்றனன். அவள் தனது பிள்ளையைத் தனது நாயகனிடம் கொடுத்து அவன்பின்சென்றபோது சோரநாயகன் "இங்கே போகின்றாயடி" என்று கூவித் தன்னுடன் வரும்படி கேட்டும் அவள் மறுத்தமையாற் கத்தியை உருவி அவளைக்குத்திவிட சொந்தநாயகன் இதைக்கண்டு அவளுக்கு உதவிபுரியப்போனபோது அவனையும் குத்திவிட அவன் ஸ்மரணையற்று விழுந்துவிட்டனன். அமிர்தம் என்பவளை அவளது சோரநாயகன் பின்னுங் குத்திஇறக்கச்செய்தனன். இங்ஙனமெல்லாஞ் செய்தபின் முன்னேறிச்சென்று பொலீசர்க்குத் தனது பெண்சாதியைக் கோவிந்தசாமி என்பவன் குத்திக்கொன்றுவிட்டானென அறிவித்தான். கோவிந்தசாமியும் சென்று தனதுபெண்சாதியைப் பக்கிரியென்பவன் கொன்றுவிட்டானென அறிவித்தான். ஆயின் பொலீசார் முந்தியவனுடைய வாய்ப்பிறப்பையே மெய்யெனக்கொண்டு கோவிந்தசாமிஎன்பவன்மீது வழக்குத் தொடர்ந்தனர். பின்பு செஷன் கோட்டில் இவ்வழக்கு விளங்கப்பட்டபோது கோவிந்தசாமி என்பவன் சுற்றவாளியெனக் காணப்பட்டான். பக்கிரி என்பவனுக்கு விரோதமாக இப்பொழுது வழக்குவைக்கப்பட்டிருக்கிறதாம். ஆனால் அவன் எங்கோ ஒழித்து ஓடிவிட்டனனாம். இக்கொலைப்பாதகன் விரைவில் அகப்பட்டு தண்டனைக்குள்ளாவானென நினைக்கின்றேம்.

பிறின்ஸ்ஜோர்ஜ்—Prince George—ஜெர்மனிக்கு மகா கொம்மிஷனராக நியமிக்கப்பட்டிருப்பவராகிய கிறீஸ்தேச ஜோர்ஜ் இளவரசர்க்கும் எமது இராணியவர்களின் சிரேஷ்டகுமாரன் உவேல்ஸ் இளவரசரின் புத்திரிக்கும் விவாகம் நடைபெறவிருக்கின்றதாம்.

—லண்டன் நகரிலுள்ள ஒருலோபி மகா இராணியாரின் சொந்தச் செலவுக்காக இரண்டுலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா நன்கொடையாக வைத்து இறந்துபோனாராம். புருஷியாவின் மேற் பாகத்திலுள்ள ஒரு பாரிய நிலவாதினர் ஜர்மன் சக்கிரவர்த்தியவர்களுக்குச் சவுக்கியமும்மனரம்மியமுமான வீடும்நந்தவனங்களும் அடர்ந்த அ,00௧ ஏக்கர் விஸ்தீரணமான ஒரு நிலத்தை நன்கொடையாகக்கொடுத்தனராம். ஆ—ன்

## கடிதம்

### ஒன்றுமாரி.
### (BUBONIC PLAGUE)

இந்நோய் இந்தியாவில் முதன்முதற் பம்பாய் இராசதானியிற் புகுந்து பிரசைகளை யொறுத்தி ஈரடோறுக்கிரளான சனங்களை வாரிக்கொண்டு போகின்றதெனவறிந்தகாட்டொடங்கி இதுபரியந்தம் யான் "இந்நோயை அகற்றற்குத் தகுந்த ஔஷதமில்லையா"வென வுசாவுவதையே தொழிலாய்க்கொண்டும், அதன் பரிகரிப்புமுறைகளை யெவராகுதல் சொல்லக் கேட்டிலேன். ஒன்றுமாரிப்பால் கட்டிக்கொள்ளுதல் இந்நோய் வாராது பாதுகாத்தற்குத் தருந்தபிரயோகமெனப் பத்திரிகைகள் கூறப் பார்த்தோம். எம் இலங்கை அரசாட்சியாரும், இந்நோய் வந்தொட்டிக்கொள்ளாவண்ணம் பிரயத்தனம் செய்கின்றனரேயன்றி, நோய்வருங்காற் பரிகரிக்கும் முறைகளை நன்குயாராய்ந்து பகிரங்கப்படுத்தக்காணேம்.

இந்தியாவிலோராயுள்வேதியர், இந்நோய் வயித்தியநூலொன்றிற் கூறப்பட்டிருக்கின்றதென்றும், இதற்கு "ஒன்றுமாரி"யே பெயரென்றும், பரிகரிப்பின் முறைகளிவையென்றும் விளம்பரஞ்செய்து இதற்குரிய மருந்துகளையுஞ் செய்து நியாயமான விலைக்குவிற்றதிகவனுகூலமடைந்துவருகின்றாரென ஒருவர்சொல்லமாத்திரங்கேட்டோம். அப்படியாயின், அது நமக்குப் பெரும்பாக்கியமே. (இதனாலன்றோ இக்கடிதத்திற்குமவர்கூற்றை முகவுரையாக்கினேம்.)

இந்நோய் இங்கும் நுழைந்து சனங்களை வாரிக்கொண்டோமற் பாதுகாத்தற்குரிய வழிவகைகளை ஆராய முயற்சிசெய்வதும், ஆராய்வதும், ஆராய்ந்தறிந்தவைகளைப் பகிரங்கப்படுத்துவதும், அத்துடனவைகளையுபயோகித்தறிவதும் எங்கள் கடனேயாம். இக்கடன் அரசாட்சியாரதென்று சொல்லி, நாம் வாளாவிருத்தலொருபோதுந் தகாது. வீடுகளை வெள்ளையடித்துக்கொள்வதும், பதனழிந்த பதார்த்தங்களை வீட்டுப்புறங்களிற் குவித்துவையாது அகற்றிக்கொள்வதும், கிணறுகளிலுள்ள சேறு குப்பைகளை வாரி நீரையுமிறைத்துச் சுத்தஜலமாக்கிக்கொள்வதும், மலசலமோசனஞ்செய்யும் ஸ்தானங்களை துப்புரவாக்கலும், தேகத்திலுள்ள அழுக்கை நாள்தோறும் போக்கி நல்லுடுபுடையை தரித்துக்கொள்வதும், நல்லுணவையுண்பதும், காற்றுப்பிரவேசிக்கத்தக்க கட்டடங்களைக்கட்டிக்கொள்வதும் பிறவுமெமது கடனேயன்றி அரசாட்சியார்கடனன்றாம். ஆதலால் நாமெல்லாம் சரீரசௌக்கியத்தின்பொருட்டுச் செய்யும்பணிகளை அரசாட்சியார்கட்டளைக்குமுன் செய்வதே தகுதியாகும்.

நோயை வருவிக்கத்தக்க நுண்ணிய துர்ப்பதார்த்தங்கள் நோயுற்றோரிடத்தின்றாயினும், அவர்கள் வசித்துமிடத்தினின்றாயினும், அல்லது பதனழிந்த பதார்த்தங்களிலிருந்தாயினுமெழுந்து பரமாணுவிற் செறிந்து சுவாசிக்கும் வாயுவுடன் கலந்து நாம் சுவாசிக்கும்போதெல்லாமுடம்பினுள்ளும் புறமும் மயிர்க்கால்களிலும் உள்ளூறுப்புகளிலுந் தங்கி, அவரவர் தேகசுபாட்டுக்கிசைய அங்கே நோய்களை விளைவிக்கின்றன. ஆதலாம் பரமாணுவிற் செறிந்து வியாபித் திரண்டறக்கலந்து வாயுவையசுத்தமாக்கும் நச்சுப்பதார்த்தங்களின் சத்தைக் கெடுத்து சுவாசிக்கும் வாயுவைச் சுத்தப்படுத்துங் கருவிகளை நாமெல்லாமாராய்ந்தறிந்தனுதினமுமுபயோகித்தல்வேண்டும். எமது வீடுவழவுகள் துப்புரவாயிருப்பினும், அயலிடங்களிலிருந்து துர்வாயுவானது எமது வீடுகளிலும் நுழைந்து இலகுவிற் தொற்றத்தக்க சிலபொருள்களிற் றங்குதலோடு எங்களுடம்பிலும் ஒருவாறு தங்குகின்றன. அரசாட்சியார் இத்துர்வாயுவைத் தார்ப்புகையாலகற்றுவர். ஆயின் நாமுமோர் வழி சொல்கின்றேம்:—

ஒன்றமாரியென்னும் பியூபோனிக் கொள்ளைநோய் பரம்புங்காலங்களில், ஓர் வாயகன்ற மட்பாத்திரத்திலாயினும், பித்தளைப்பாத்திரத்திலாயினும் வேப்பேரட்டை அதில் நிரப்பி நெருப்புற விறகையுமிட்டுத் தங்கள் தங்கள் படுக்கையறைகளிலும், உலாவும் பிறவிடங்களிலும், சனசமூகமத்தியிலும் காள்தோறுந்தவறாது வைத்துவருதல்வேண்டும். இதனாலடிக்கடி அறைகளுக்குட் பிரவேசிக்குந் துர்வாயுவானது விரைவிற் சுத்தமாகும். இத்தீயிலிருந்தெழும்புங் புகையும், அதனோர்வகை மணமும் இவைகளைச்சுவாசிக்கின்ற நுளம்புமுதலிய சிறுஜெந்துக்களை வெகுவிரைவில் மடியவுஞ் செய்கின்றன. ஈக்கடியால் நித்திரையிற் பங்கப்படுவோர்க்குமிதுவோர் தக்க ஔஷதமாகும். வேப்பேரட்டுடன், எண்ணெய் நீக்கிய வேப்பம்பிண்ணாக்கையுந் தணல்செய்து கலந்து திமூட்டிவைக்கின் எவ்வகையான நீக்காற்றும் அதன்மணமும், புகையும் விசாலித்திருக்குமிடங்களிற் பிரவேசித்தவுடன் பரிதிமுற்பட்ட பனிபோலச் சத்துக்கெட்டழிந்துபோம். இராக்காலங்களில் விளக்கேற்றிவைத்தற்காகப் பாவிக்கப்படுமெண்ணெயும் வேப்பெண்ணையாயிருப்பின் உத்தமம்.

இன்னும், இந்நோய் அயல்வீடுகளிலிருக்கக்கண்டால் உடம்புமுழுதுந் தெளிவெண்ணெய் (வேப்பெண்ணெய்) தேய்த்துக்கொள்ளல்வேண்டும் இப்படிச்செய்தால், இந்நோய் நம்மிலொருசிறிது மொட்டிக்கொள்ளாது. இவ்வாறு தினந்தோறுஞ்செய்தலவசியமன்று. இன்னும், போசனத்துக்குப் பின்னுயினும், முன்னுயினும் தினந்தோறும் ஓர்கரண்டி தெளிவெண்ணெய் குடித்துவரல்வேண்டும். (சாப்பாட்டுக்குமுன் குடித்துச் சிலநிமிஷத்தின்பின் போசனமுண்பதுத்தமம்.) இது கொள்ளைநோய்வாராமற் காப்பாற்றற்கேயன்றி, உடம்பிற் சகசமாய்க்கிடக்கும பிறநோய்களையுங் கண்டிக்கவேதுவாகும். எம்மவரிற் சிலர் தெளிவெண்ணெய் குடித்துவருகிறார்கள். [illegible]ண்ணெயின் மணமும், ருசியும் தொடக்கத்திற்சிலாக்கு அரோசிப்பினுமரோசிக்கும்; ஆயின், சிலகாலம் பாவித்தபின் அது அவர்க்குப் பசுநெய்போற் றோற்றும். இப்படிச்செய்துவருவோர் சிறிதுமச்சமின்றி நோயாளரைப் பரிகரிக்கலாம்.

துர்வாயுவை யகற்றுந்தன்மை வேம்புக்கிருத்தலினாலன்றோ ஆயாசமாய்க்கிடப்போர்க்கும் பேய்பிடித்தோர்க்கும் வைத்தியர்கையில் வேப்பிலைகொண்டடித்துப் பார்க்கின்றார். இன்னும், பாவிக்கும்நோக்கந்தெரியாமல் முன்னோர்வழக்கப்படி பலர் துர்வாயுவையகற்றுதற்கு வேம்புதிரவியங்களைப் பாவித்துவருகின்றனர். வைசூரி, கோமாரி, ஒன்றுமாரிபோன்ற நோய்களுக்கு வேம்பு விசேஷமென்ப தெங்கருத்து. முற்கூறிய ஓடு, பிண்ணாக்கு, எண்ணெய் முதலியன அதிகவிலையுயர்ந்த திரவியங்களல்ல. கருட்டுமுதலிய சேட்டைப்பொருள்களுக்குச் செலவுபண்ணும் பணத்துக்கு இவைகள் வாங்கிக்கொள்ளத்தக்கன. இந்தியாமுதலிய பிறவிடங்களிலிருப்போர்க்கு இங்கிருந்து வேண்டியளவுவாங்கியனுப்பலாம்.

இங்ஙனம், A. K.
உடுவில்

### களவு.

இக்காட்களில் ஊர்கடோறும் இடைக்கிடை களவு செய்யப்படுதலால் அதைப்பற்றிச் சில்வற்றை இங்கே சொல்வாம்: இக்காட்களில் யாரோ சில கள்வர் கூடி "வடதேசத்திலிருந்து ஐயாவும் அம்மாவும் என்று இரண்டு பேர்வந்திருக்கிறார்கள். இரவிலே வீட்டுக்குவீடு வந்து கூப்பிடுவார்கள். அப்போது ஒருவரும்பேசப்படாது. நித்திரைபோலக் கிடத்தல்வேண்டும். அவர்கள்வரும்போது யாரும் பேசினால் அந்தவீட்டிலிருப்பவர்கள் எல்லாரும் பிளேக் கொள்ளைவியாதிவந்து செத்துப்போவார்கள்" என்று பொய்களைச்சொல்லி சில எளைச்சனங்களைச் அனுப்பிவிட்டு பலவிடங்களில் களவெடுத்தார்களாம். சிலகள்வர் சிலருடைய வீடுகளில் களவெடுக்கும் நோக்கத்துடன்போக, வீட்டமரேழுந்து கலைத்துத் துரத்திவிட்டார்களாம். இக்கள்வருடைய அனுப்புதல்களுக்கு எடுபட்டு மயங்கியிருக்குஞ் சனங்களை, அப்படி மயங்காதபடி, பக்கத்திலுள்ள விவேகிகள் இதைப்பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியும்படி சொல்லல்வேண்டும். இதைப்பற்றி விதானைமார் பொலிசுமார் முதலியோரும் கவனித்தல்வேண்டுமன்றோ.

களவுசெய்தவரையும், களவுக்கு உபாயஞ்சொன்னவரையும், களவுசெய்தவரைப் பிறர் தேடித்திரியக் காட்டிக்கொடாது மறைத்துவைத்தவரையும், நரகத்திலே இயமதூதர்கள், அவயவங்களெங்கும் இருப்புமுளைகளையறைந்து வருத்துவார்களென்றும், பாசத்தினாலே அவயவங்களெல்லாவற்றையும் கூட்டிக்கட்டி, அக்கினி நரகத்திலே குப்புறப்போடுவார்களென்றும், அவர்கள் நெடுங்காலம் நரகதுன்பம் அநுபவித்தபின்னர், பூமியிலேபிறந்து, குட்டம் காசம் வாதம் மூலரோகம் முதலிய நோய்களினால் வருந்துவார்களென்றும் உண்மைநூல்கள் கூறுகின்றன ஆனபின், இவைகளையெல்லாம் உற்றுநோக்காது களவுசெய்தல் எவ்வளவு மூடத்தனம், களவினால் வரும்பொருள் வளர்வதுபோலத்தோன்றி, தான்போம்பொழுது பாவத்தையும் பழியையும் நிறுத்திவிட்டு, முன்னுள்ள பொருளையும் தருமத்தையும் உடன்கொண்டுபோய்விடும். "களவினலாகிய வாக்கமளவிறந்தாவதுபோலக் கெடும்" அறியாமையினாலே களவு அப்பொழுது இனிதுபோலத் தோன்றித் தான்பயன்கொடுக்கும்பொழுது தொலையாத இடும்பையைக்கொடுக்கும். "களவின்கட்கன்றியகாதல் விளைவின்கண்—வீயாவிழுமந்தரும்" கள்வர்கள் இம்மையிலே அரசன்முதலியோராலே தண்டிக்கப்பட்டு, மேற்கூறியவாறு மறுமையிலும் இயமதூதர்களால் தண்டிக்கப்படுவார்கள். களவுமுதலிய பெருங்கொடும்பாவங்களைச் செய்யாதவர்கள், இம்மையிலே யாவராலும் நன்குமதிக்கப்பெற்று, மறுமையிலும் மேலுலகங்களாகிய புண்ணியலோகங்களிற் தேவராயவதரிப்பர். "கள்வார்க்குத் தள்ளுமுயிர்நிலை கள்ளார்க்கு—தள்ளாதுபுத்தேளுலகு" களவு செய்யாதவர்கள் பிராமணவருணம்முதலிய உயர்ந்தவருணங்களிற் பிறந்தவராயினும், மிக இழிந்த வருணங்களிற் பிறந்தவராகவே மதிக்கப்படுவார்கள். "காமராய்க் கற்பழித்தோர் களவுசெய்துடல்வளர்த்தோர்—மாமிசந்தின்போரெல்லாம் மானுடப்புலையராவர்" ஈசுரத்துரோகிகள், கொலைஞர், கள்வர், கள்ளுச் சாராயம் முதலிய வெறிதரும் வஸ்துக்களையுண்போர்கள், பொய்யர், சூதாடுவோர், தூர்த்தர், வஞ்சகர், பொறாமையுடையவர், அறஞ்செய்யாதவர், புறங்கூறுவோர், பலரோடு பகைகொண்டவர், அளவுக்குமிஞ்சிச் செலவுசெய்பவர், முதலியோர்களோடு கூடுதல் களவுக்குக் காரணமாய் முடியும். "தீயாரைக்காண்பதுவுந் தீதேதிருவற்ற—தீயார்சொற்கேட்பதுவுந் தீதே—தீயார்—குணங்களுரைப்பதுவுந் தீதேயவரோ—டிணங்கியிருப்பதுவுந் தீது" உயிர்க்கு உறுதிபயக்கும் நூல்களைப்படித்தல் படிப்பித்தல் கேட்டல்களிலும், கடவுளுக்குத் திருத்தொண்டுகள் செய்தலிலும், சோம்பேறிகளாயிராது தருமவழியாகப் பொருள்சம்பாதித்தல், அப்பொருளைக்கொண்டு தருமஞ்செய்தலிலும், காலத்தைதப்போக்கும் நல்லோரைக் கூடுதல், அவர்கள் சொற்கேட்டல், அவர்கள் நல்லொழுக்கத்தைப் பிறர்க்கெடுத்துரைத்தல், ஆகிய சற்கருமங்களில் முயற்சியாயிருத்தல் களவுமுதலிய இழிந்தசெய்கைகளுக்குக் காரணமாகாது, நல்லொழுக்கம் முதலியவற்றிற்றே காரணமாகும். "நல்லாரைக்காண்பதுவு நன்றேநலமிக்க - நல்லார்சொற்கேட்பதுவுநன்றே,- நல்லார்-குணங்களுரைப்பதுவுநன்றேயவரோ - டிணங்கியிருப்பதுவுநன்று" யாவரும் இவற்றையெல்லாமுற்றுநோக்கின், பிறருடைமையாயிருப்பதியாதொருபொருளையும் அவரிடமிருந்துவஞ்சித்துக்கொள்ளக்கருதார். 'புலையுங்கொலையுங் களவுந்தவிர்'

இங்ஙனம, S. P.

### ஸ்ரீமத். Pandit ௩. வே. கனகசபாபதிஐயரவர்கள் உடப்பங்கரையிற்செய்த சைவப்பிரசங்கம்.

இச்சமீ ௪0உ மேற்சுட்டிய ஐயரவர்கள் முனீசுரம் வந்திருந்தார்கள். அதனையறிந்த இவ்வூர் சமயாபிமானிகளிற் சிலர் இவ்விடம்வரும்படியழைத்தார்கள். ஐயரவர்கள் ௪உஉ இவ்விடம்வந்தார்கள். அன்றிரவு கடைவீதியிலுள்ள ஒருபெரிய புதுவீட்டில் பிரசங்கஞ்செய்தார்கள். இங்குள்ளவர்கள் எல்லாரும் வந்து கேட்டார்கள், அன்று பேசியவிஷயம "சிவனேகடவுள்" என்பது. ௪௩உ இரவு திருவிளையாடற்புராணத்திலுள்ள வலைவீசினபடலமும், ௪௪உ இரவு பெரியபுராணத்திலுள்ள அதிபத்தநாயனார்புராணமும் ௪௫உ கல்வியின்மகிமையும், ௪௬உ தினம் சிவாலயதரிசனம் என்னுமிவைகளே பிரசங்கிக்கப்பட்டன.

இவ்வூரிலே இதற்குமுன் இவ்வாறாய பிரசங்கம் நடக்கவில்லை. ௪௭உ ஐயரவர்கள் கொழும்புக்குப் பிரயாணமானார்கள் நமது பிள்ளைகள் எல்லாரும் தங்கள் தங்கள் தகுதிக்கேற்றபடி பொருள் சமர்ப்பித்து சுவாமீ! தாங்கள் ஆறுமாசத்துக்கொருவிசை இங்கு விஜயஞ்செய்து நம்மெல்லாருக்கும் நல்லறிவுச்சுடர் கொழுத்தல்வேண்டுமென்று வேண்டினார்கள்.

ஐயரவர்கள் பண்டிதரேயன்றி பாமரசனங்களும் மிகஇலேசில் அறியும்படி வெளிப்படையான பாஷை பேசினார்கள். இடையிடையே சந்தச்செய்யுள்களும் கதைகளும் இடையீடின்றிப் பொழிந்தார்கள். இந்தப்பிரசங்கத்தில் இவ்வூர்ச்சனங்கள் மிகவுஞ் சந்தோஷமடைந்தார்கள்.

உடப்பங்கரை
லா. முத்துக்காமாட்சியாபிள்ளை.

### சந்தேகவினா.

ஜோதிஷ வியுற்பத்திமான்களே!

முக்குணவேளை, காலவோரை, இராகுகாலல் முதலியன திவாவிலும நிசியிலுங் கொள்ளப்படுவனவாகலானும், திவா நிசிமானங்கள் மேஷாயன துலாயனங்களிலன்றி மற்றைக்காலங்களில் ஏறியுந் தாழ்ந்தும் வருதலானும், திவப்பிரமாணத்திற் கொள்ளின, பானுவாரங்களில் ஏகம்சம் இராகுகாலமும், எல்லாவாரங்களிலும் முக்குணம்வேளை காலவோரைகளும் திவாநிசியிரண்டினும பாகுபட்டுக்கலத்தலுடையவாகலானும், திவாநிசி மானங்களைப் பாகித்துக்கொள்ளுதற்குப் பிரமாணநூற்பிரமாணம் அகப்படாமையானும், இவைஎங்ஙனம் கொள்ளப்படத்தக்கன என்பதைத் தக்கநூற்பிரமாணத்தோடும வெளிப்படுத்தினதிசந்தேகத்தைப்பரிகரித்துவிடுமாறுதங்களை வேண்டுகின்றேன். இங்ஙனம், இராகுகாலசந்தேகி.

that he intended to prejudice us in the eyes of Christians by preferring a baseless charge?

It is not our province to quarrel over his statement that Christianity is "now the one universal religion." To disabuse his mind of the delusion, we shall only ask him to compare the religion taught in the Gospels with what he states to be the "one universal religion." If he is honest to himself, he will find that the religion taught by Christ as much differs from the "one universal religion" as the citizens of the great American Republic differ from the American Indians that preceded them.

## LOANS TO PUBLIC SERVANTS TO BE PROHIBITED.

We do not know if the proposed Ordinance providing that no action will lie against a public servant for any money advanced at his request will prove an unmixed blessing to those for whose benefit it is intended. There are occasions when an officer of Government will be under the necessity of borrowing, as for instance, when a member of his family falls ill, dies, or marries. His borrowing powers may be limited with benefit to himself, but to absolutely prohibit any money being advanced to a servant of Government will, in our humble opinion, prove a source of hardship We do not lose sight of the fact that public servants, in most cases, are harassed by money-lenders who take advantage of their necessities and charge usurious rates of interest. But the Government ought to see that a measure undertaken for the relief of its servants does not prove detrimental to their interests. We venture to think that an enactment providicg that no rate of interest exceeding nine or six per cent can be charged on moneys lent to a public servant will secure the desired result. A usurious money-lender will not care to lend at such a small rate of interest, while honest people who are willing to help a needy officer will be able to do so without contravening the provisions of the law. In proceeding to redress the grievances of its servants, the Government ought not to entirely take out of their hands the power of borrowing. If the scope of the Ordinance is enlarged and the lending of money to all public servants is prohibited for the purpose of maintaining the prestige of the Public Service, the question has to be discussed from other standpoints. But to permit public servants whose salary exceeds the sum of Rs 300-. a month to borrow at pleasure and to absolutely prohibit loans to those who draw a lesser salary looks invidious. We hope that before the proposed measure becomes law, the extent of the relief necessary for the protection of public servants will be fully considered so that by the introduction of a sweeping change the remedial legislation may not prove a failure.

## LOCAL AND GENERAL.

Weather—Copious rains have fallen throughout the district during the past fortnight. It drizzled incessantly from the evening of the 23rd till the Morning of the 27th Instant with heavy showers and gusts of wind occasionally. Unprecedentedly heavy rains have fallen this year in December.

Health—Fever of a very bad type prevails all over Jaffna in the form of an epidemic. For the past ten years or so, December, January, and February have proved the most unhealthy months of the year. This year owing to the very heavy rains which fell in October and which are now falling, the fever "of the season" has assumed larger proportions, and there is not a single household among the poorer classes one or more or all the inmates of which are not suffering from fever. Even well-to-do classes do not enjoy perfect immunity from its attacks. The number of people who attend the several Dispensaries of Jaffna every morning and evening may be said to be "legion". This state of things is chiefly due to the absence of a proper drainage system all over the Town and its Suburbs and to overcrowding in some localities. Of all important centres of population in the Island, Jaffna is the most neglected in the matter of sanitation. There is not a single public latrine in the whole Town. It behoves those who oppose the establishment of a Local Board more than others, to see that proper sanitary measures are taken by the central Government for the preservation of the public health.

The District Judge—Mr. C. Eardley-Wilmot and Mrs Eardley-Wilmot are spending their Christmas Holidays at Point Pedro.

Calcutta Entrance Examination—Three girls from the Vembadi Girls' High School are to present themselves at the Calcutta Entrance Examination.

F. N. S. Hospital—Mr Dutton of Uduvil has been appointed Dresser at the F. N. S. Hospital in succession to the late Mr. Kandavanam.

The Registrar-General—Mr. P. Arunachalam who arrived from Trincomalie by the S S Lady Havelock, and who spent a week in Jaffna inspecting the Office of the Registrar of Lands and the Protocols and Duplicates of the Notaries, whom he summoned to appear before him, returned to Colombo last week.

The Head Clerk of the Customs—Mr. W. Deutrom the Head Clerk of the Jaffna Customs, has proceeded to Colombo.

Obituary—We regret to record the death of Mrs Jocabo Santiagupillai, the widow of the late Mr. Santiagupillai who was a brother of the late A. Paul Mudaliyar, Chief Mudaliyar of the Jaffna Kachcheri. The deceased was a daughter of the late Nicholas Saudrasagara Mudaliyar and a niece of the late Savirimuttu Mudaliyar, the most distinguished of the Chief Mudaliyars of the Jaffna Kachcheri.

Rape and Murder—A dastardly murder preceded by rape was committed at Kankesanturai a few days ago. Four men took hold of a village girl, violated her, and for the purpose of concealing the crime of rape murdered her. It is also reported that she was robbed of her jewels. The culprits have been already taken into custody, we understand.

Mr Advocate Tirunavukarasu—Mr. Tirunavukarasu and Mrs Tirunavukarasu are on a visit to their relations in Colombo. They will return to Jaffna after spending the Christmas and New Year holidays in Colombo.

The New Edition of Villiputturen's Baratam with Commentaries—We acknowledge with thanks the receipt of the 1st part of the *Sapa Parvam* brought out by Mr. K. Velupillai from the Vivekananda Press of which he is the Proprietor. He has already published the *Athi Parvam* by parts which are now bound together in one volume and ready for sale, the price being Rs 3-50 per copy. The Commentaries on the *Sapa Parvam* are from the pen of Mr. Kumaraswamy Pulavar, a pupil of the late lamented Mr Ponnampalapillai, and brother of Mr. V. Ganapathippillai, Tamil Pundit, Maharajah's College, Travancore. The commentaries faithfully convey the meaning of the text while maintaining a marked simplicity in style. The words are properly chosen and there is no deviation from the sense of the original. There being no other edition of Baratam with commentaries, Mr. Velupillai's new venture supplies a long-felt want, and he amply deserves the th[illegible]l who have the interests of Tamil literature at heart.

Precautionary measures against the plague—Mr. Ievers and Dr. Thornhill were on a visit to Kayts last week to see that due precautionary measures are taken to guard against the introduction of the plague into the Peninsula.

Police Magistrates—In a recent number of this paper, in commenting on the unjust and undeserved supersession of Mr T. M. Tampoo as Police Magistrate of Kayts, we deprecated the practice of appointing to Police Magistracies gentlemen devoid of any legal training or qualifcation. We are now glad to learn that by a recent minute of the Government, all Police Magistrates who not members of the Civil Service or of the Bar are required to pass an examination in *the Ceylon Penal Code, the Criminal Procedure Code,* and *the Evidence Act* within nine months of their appointment. Failure to pass will involve a cancellation of their appointment, but His Excellency the Governor, if he thinks fit, may extend the period mentioned for a further term of six months.

Mr. M. S. Ramalingam—We are glad to announce that Mr. M. S. Ramalingam, Chief Clerk of the Panwilla Courts, has been appointed second Interpreter of the Supreme Court in succession to Mr. C. Kailasapillai who has been made the first Interpreter. Both are good and true men and we hope that after winning their laurels as members of the Supreme Court staff they will rise to more important positions in the Public Service.

A Notification—The Government notifies that one Cadetship in the Lower Division of the Civil Service will be offered for competition in June 1899, the salary of which has been fixed at Rs. 3000—. per annum Application for nomination on prescribed form (which may be had at the Colonial Secretary's Office) will be received up to February 1899. For regulations governing the examination, see the Ceylon Civil List, pages 186, 187, and 188.

The Thai Pongal—As usual, The Thai Pongal day being the 13th January 1899 has been proclaimed a Public Holiday. Even since the Holidays' Ordinance No. 4. of 1886 was passed, the Thai Pongal day has been proclaimed a public Holiday. It is a pity that it is not a day specially mentioned in the Holidays' Ordinance as a Public Holiday, which the Hindu New Year's day falling in April is. His Excellency the Governor, however, has invariably appointed the Thai Pongal day to be observed as a Public Holiday by virtue of the powers vested in him by section 9 of the Ordinance, whereby he is empowered to appoint to be observed as a Public Holiday or Bank Holiday any special day in addition to the days mentioned in the Ordinance.

LADIES, Why SUFFER?

As a Positive Cure, for all Chronic and the most Intractible Female Complaints and Irregularities, "Pruni-men-vip" is Queen of the World. A Powerful Uterine Tonic and Female Regulator for the Cure of all Female Complaints and Irregularities. Innumerable Females suffer in silence diseases peculiar to their sex. These need not suffer any more. Every dose effective. Worth its weight in gold. Price Rs. 3/ and 5/8 per bottle. (32 and 64 doses.)—Only from LAWRENCE & LYNCH, Manufacturing Chemists, 6 Royd Street, Calcutta.

## RELIGION AND MATERIAL ADVANCEMENT.

The London Spectator in a very thoughtful article discusses the claims of the adherents of any particular religion to the monopoly of worldly success and of advancement in civilisation. The immediate occasion for the consideration of the question was the pronouncement of the Bishop-elect of Calcutta—the Roman Catholic Bishop at Darjeeling has already made it a little too familiar to us—that Protestantism, wherever it has taken root, has been productive of immense advantage to the professors of that faith. We confess that this new propaganda comes with a very bad grace from the spiritual head of Sate Christianity in India. Having regard to the antecedents of the great teacher who has at considerable sacrifice consented to come to India, we were not prepared for such a dictum from so thoughtful an ecclesiastic. Our contemporary points out that it is not correct to say that there is anything inherent in the teachings of Christ which leads men to busy themselves with the concerns of life. On the contrary, that great teacher misses no opportunity to point out the worthlessness of worldly goods and possessions and the evils that ensue from the worship of mammon. Christianity, as conceived by its great founder, is as altruistic as any other religion. With the probable exception of Buddhism there is no religion on the face of the earth which more forcibly inculcates the doctrines of submission, meekness and self-negation than Christianity. Notwithstanding all that we have said above, we cannot help admitting that there is a substratum of truth in the assertions of Dr. Welldon. The truth is that Christianity, as practised, is not the Christianity as taught by its founder. It is in the pulpit—at least it ought to be there. It is in the Bible, and sometimes it is in the cottage. Elsewhere it is conspicuous by its absence! Christianity does not play the same part in the every-day life of the Christian as Hinduism does in that of its devotees, There is the Sunday and the Church and there are men paid to speak of the soul and the hereafter. But to the practical work-a-day man, it generally has no significance. To the Hindu, his every movement is consecrated to his religion. He moves and has his being, he breathes and feeds upon religion. It is this characteristic that has given to our hoary religion a vitality and a strength which are unperishable. We have no paid teachers, and every moment of man's life has a religious duty attached to it. Above all, such a religion has been lived in its entirety by thousands upon thousands. Its attractions have been great that men in all conditions of society have hankered after it and realised its blessings. Successive generations of men have treaded in the footsteps of their predecessors renouncing more, abdicating further, till their lives and their examples have gone into the very vitals of the nation itself. To such a nation nothing is more real than its religious lives, and its spiritual head could not have harangued in the way that the Archbishop of Calcutta held forth. But Dr. Welldon knew his audience; he knew their temperament and he knew their lives. He therefore was not altogether without justification in putting forth before his hearers the material advantages of Christianity. Probably to the nineteenth century Protestant it would have been absurd to point out that when you have been smitten on one cheek, you should have shown the other. What a farce such a lecture would prove to the victors of Omdurman! How stupid the whole thing would have sounded to those whose only thought of the moment is to show the inability of fresh pretensions to any portion of the valley of the Nile? The preacher and the King are the creatures of the times they live in. They are formed after the fashion of their surroundings. To a Hindu leader the whole performance looks incongruous—a spiritual pastor lecturing upon the excellence of his cult by pointing out the immense material benefits which its profession will bring to the convert. Unfortunately, the popular belief in this country regarding conversions to Christianity has been the probable preferment in the outside world which the new religion is calculated to ensure; and we are sorry to find that the highest religious authority in India should have so unequivocally committed himself to this theory. A Hindu preacher would have told his disciple that unless he has lost everything, wealth, worldly advantages, and himself, there is no salvation for him. But, as Rudyard Kipling would have said, that is another matter.—The Hindu

PRINTED AND PUBLISHED BY P. CARTHIGASAPILLAI FOR THE PROPRIETORS AT THE SAIVAPRAKASA YANTRA OFFICE, JAFFNA.